தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 02 November 2025
DOI: https://doi.org/10.63300/tm040211

# Feminist Thoughts in the Novel 'Idakkai'

**S. Rose Rani,**
PhD Research Scholar, Reg.No:BDU2120632779440,
Tamil Department, Khadir Mohideen College, Adiramapattinam-614701.
Affiliated to Bharathidasan University, Tirichirapalli. Email: roshafi1982@gmail.com
**Dr. S. Sabhira Begum,**
Associate Professor, PG And Research Department of Tamil, Khadir Mohideen College,
Adiramapattinam-614701. Affiliated to Bharathidasan University, Tirichirapalli,
Email: dr.sabhira.kmc@gmail.com

**Abstract:**

This article explores the manifestation of feminist ideologies (*Peṇṇiyac cintanaikaḷ*) within S. Ramakrishnan's prominent contemporary Tamil novel, *Idakkai* (The Left Hand). Historically, the dynamic between genders has been marked by inherent hierarchies, positioning women in roles of traditional dependence—relying sequentially on parents, husbands, and children. The study first contextualizes feminism as a critical movement designed to understand and dismantle these gendered complexities and discriminatory power structures, drawing upon established definitions that highlight the struggle against gender-based suffering. While women have achieved considerable success in modern fields, the influence of inherited patriarchal authority continues to limit their social mobility and status. Utilizing the socio-political arguments of pioneering reformists like Periyar (E.V. Ramasamy), who advocated for women's agency beyond domestic servitude, this paper analyzes the specific depiction of female characters and their social station within the narrative landscape of *Idakkai*. The central objective is to assess how S. Ramakrishnan's work portrays women's struggles for equality, autonomy, and socio-economic elevation in line with contemporary feminist demands.

**Keywords** : *Idakkai* (Novel), S. Ramakrishnan, Tamil Literature, Gender Equality, Women's Status, Patriarchy, Literary Analysis

**References:**

1. Krishnan, R. (n.d.). Kālantōṛum Peṇ [Woman Through the Ages].
2. Muthuchidambaram, S. (n.d.). Peṇṇiyam Tōṛramum Vaḷarcciyum [Feminism: Origin and Development].
3. Prema, N. (n.d.). Peṇṇiyam [Feminism].
4. Ramakrishnan, S. (n.d.). Iḍakkai [Left Hand].

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

# இடக்கை நாவலில் பெண்ணியச் சிந்தனைகள்

**ச. ரோஸ்ராணி**

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, காதிர் முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி.

**முனைவர் எஸ். சாபிராபேகம்**

நெறியாளர், இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, காதிர் முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி.

**ஆய்வுச் சுருக்கம்:**

சமூக அமைப்பில் தொன்றுதொட்டு நிலவிவரும் ஆண், பெண் உறவுச் சிக்கல்கள், பாலினப் பாகுபாடுகள் மற்றும் பெண்களின் சார்பு வாழ்க்கை முறை ஆகியவை குறித்து பெண்ணியச் சிந்தனைகள் முக்கிய விவாதங்களை எழுப்புகின்றன. பெண்ணியம் என்றால் என்ன, அதன் இலக்குகள் என்னென்ன என்பதை வரையறுக்கும் நோக்கில் இக்கட்டுரை தொடங்குகிறது. பண்பாடு, அதிகாரம், பொருளாதாரம் ஆகிய தளங்களில் பெண்கள் இரண்டாமிடத்தில் வைக்கப்படும் நிலைப்பாட்டையும், பெண்கள் சமூக சமத்துவத்தை நாடுவதன் அவசியத்தையும் தந்தை பெரியார் போன்றோரின் கருத்துக்களை முன்வைத்து விவாதிக்கிறது. இவ்வாய்வானது எஸ். ராமகிருஷ்ணனின் 'இடக்கை' என்னும் நாவலை மையமாகக் கொண்டது. இந்த நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ள பெண்களின் சமூகத் தகுதி நிலை, அதிகாரத்தின் மீதான அவர்களின் பங்கு, உரிமைகள் மற்றும் அவர்களுக்கு இழைக்கப்படும் பாகுபாடுகள் ஆகியவை பெண்ணியக் கண்ணோட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்படுகின்றன. இதன் மூலம், சமகால இலக்கியத்தில் பெண்ணியச் சித்திரங்கள் வெளிப்படுத்தப்படும் விதத்தையும், சமத்துவத்தை நோக்கிய பெண்களின் தேவைகளையும் இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

***திறவுச்சொற்கள்:*** *இடக்கை (Idakkai), பெண்ணியம் (Feminism), எஸ்.ராமகிருஷ்ணன் (S. Ramakrishnan), பெண்களின் நிலை (Status of Women), பாலினச் சமத்துவம் (Gender Equality), சமூகத் தகுதிப்பாடு (Social Status).*

**முன்னுரை**

மனிதஇனம் தோன்றிய காலகட்டத்திலிருந்து தற்காலம் வரை ஆண், பெண் இணைவு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட்டு வருகின்றது. இவ்வாறான ஆண், பெண் இணைந்த வாழ்க்கையில் உயர்வு தாழ்வு ஏற்படுவது இயற்கையே. இதற்கு உடல் அமைப்பும், சமூக மதிப்பும் ஒரு காரணமாய் அமைகிறது என்று கூறுவதற்கு இடம் இருக்கிறது. சமூக அமைப்பில் பெண் என்பவள் ஒருவரைச் சார்ந்து வாழ்பவளாக இருக்கும் நிலையை இன்று காணமுடிகிறது. பெண்கள் வாழ்க்கையில் பெற்றோரையும், திருமண வாழ்க்கையில் கணவனையும், முதுமை வாழ்வில் பிள்ளைகளையும் சார்ந்து வாழ்கின்றனர். இச்சார்பு வாழ்க்கையில் உயர்வு தாழ்வு ஏற்படுகின்றது.

"பெண்ணியம் என்பது பெண்ணின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலக அளவில் அரசியலிலும் பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்1 என்பது சார்லட்பன்ச் மற்றும் புட்சர் என்பவர்களின் கூற்று ஒப்புக் கொள்ளத்தக்கது.

"பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கமே பெண்ணியம்"2 என்று சி.முத்துச் சிதம்பரனார் குறிப்பிடுகிறார்.

**பெண்ணியம்**

கல்வி மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்ட பெண்கள் மத்தியில் சமீப காலமாக பெண்ணியம் அதிகம் பேசப்படுகிறது. பெண்ணியம் என்னும் இச்சொல்லினை ஆங்கிலத்தில் (Feminism) என்று அழைப்பர். இந்த ஆங்கிலச்சொல் ஃபெமினா என்ற இலத்தீன் மொழியிலிருந்து பிறந்தது.

"பெண்ணியம் ஸ்தூலமான வரலாற்றுக் கலாச்சார நடைமுறைகளிலும் பார்வைகள் உணர்வுகள் செயல்பாடுகளின் நிலையிலும் கொண்டிருப்பதால் இதன் வரையமுறையானது மாற்றமடையக்கூடும். மாற்றமடையச்செய்யும்"[3] என்று இராஜம்கிருஷ்ணன் என்பவர் இப்பெண்ணியம் குறித்துக் குறிப்பிடுகிறார்.

**பெண்ணியத்தின் நோக்கம்**

பெண்களுக்கு உணர்வுகளும் உரிமைகளும் இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் பெண்கள் எல்லாத் துறைகளிலும் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகின்றனர் என்றாலும் பாலியலுடன் தொடர்பு கொண்டுள்ள அதிகாரம் அவர்களைப் பெருமளவில் தாக்குகிறது.

"பெண்ணின் பாலியல் நிலை சமூகத் தகுதி நிலையில் இன்று சமத்துவமற்றதாகப் பல பெண்ணடிமை வாதிகளால் கருதப்படுகிறது. அது அரசியல் பண்பாடு ஆகியவற்றில் பெண்ணை இரண்டாமிடத்தில் நிறுத்துகிறது. உரிமை மற்றும் கடமை ஆகியவற்றில் சமத்துவமின்மை நிலவுகிறது. உயிரியல் அடிப்படையில் பலமற்றவளாக சக்தியற்றவளாகத் திகழ்கிறாள். தாழ்வு மனம் கொண்டவளாக சமூகத்தில் அவள் இயக்கம் குறைக்கப்படுகிறது. (Kathy Davi and other, The Gender of Power) இந்நிலை மாற வேண்டும் என்ற சீர்திருத்தவாத தந்தை பெரியார் எண்ணினார். ஆகையால் தான் அவர் பெண்களைப் புருஷனுக்கு நல்ல பண்டகமாக மாத்திரம் ஆக்காமல் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றவும் கீர்த்தி புகழ் பெறும் பெண்மணியாக்கவும் வேண்டும். நமக்கும் ஆணுக்கும் ஏன் பேதம் ஏன் நிபந்தனை உயர்வு-தாழ்வு ஏன் என்ற எண்ணம் ஒவ்வொரு பெண்ணுக்கும் எழ வேண்டும்" என்று குறிப்பிடுகிறார். எனவே பெண்களின் தகுதிப்பாடு அதிகார அளவிலும் சமூக மதிப்பு அளவிலும் இன்னும் உயர்தல் வேண்டும். அந்த வகையில் எஸ்.ராமகிருஷ்ணனின் இடக்கை நாவலில் அவர் காட்டும் பெண்களின் நிலை குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**இடக்கை நாவலின் கதைச்சுருக்கம்**

இடக்கையை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என கட்டாயப்படுத்தப்படும் தாழ்த்தப்பட்ட ஜாதியை சேர்ந்தவனையும், ஒரு பேரரசனையும் இணைத்து, இந்த நாவல் செல்கிறது. நாவல் முழுக்க நீதி மறுக்கப்பட்ட மனிதனின் துயரக் குரலை அழுத்தமாக பதிவு செய்கிறார் எஸ்.ரா.

ஔரங்கசீப்பின் கடைசி நாட்களில் துவங்குகிறது. நாவல், அந்திமக் காலத்தில் தனது முடிவு பற்றி ஐயமும், நோயும், உறக்கமில்லாத இரவுகளும் அவரை தீவிரமாக சிந்திக்க வைக்கின்றன. ஞானி முகைதீனிடம் தனது விதியை பற்றி தெரிந்து கொள்ள முயல்கிறார். இந்த இடத்தில் ஞானிக்கும்

ஔரங்கசீப்புக்கும் இடையே நடக்கும் உரையாடல்கள் ரத்தக்கறை படிந்த எல்லாக் கைகளுக்கும் சொல்லப்பட்ட கருத்துக் கருவூலங்களாகவே உள்ளது. ஔரங்கசீப் இறப்புக்கு பின்பு ஆட்டுத்தோல் பதப்படுத்தும் சாமர் இனத்தைச் சேர்ந்த தூமகேது என்பவனும், ஔரங்கசீப்பின் அந்தப்புர பணியாளரும் அரவாணியுமான அஜ்யாபேகமும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்படுகின்றனர்.

தூமகேது தான் ஆட்டுத்தோல் திருடியதாக பொய்க்குற்றம் சாட்டப்பட்டு காலா சிறையில் வருந்தும் போது பல அவமானங்களை சந்திக்கின்றான். சிறையிலும் அவனுக்கு காலாப் பகுதியை துப்புறவு செய்யும் வேலையே தரப்படுகிறது. சாமர் என்று அழைக்கப்படுகின்ற அவனது முன்னோர் இடக்கை பழக்கம் உடையவர்கள். உண்மையில் அவர்கள் வலக்கையை பயன்படுத்தக்கூடாது என்பது தான் அன்றைய விதியாக இருந்தது. வலக்கையை அவர்கள் பயன்படுத்தினால் கடவுள் அவர்களை தண்டித்துவிடுவார் என்ற பயமும் அவர்களின் மனதில் எப்படியோ பதித்திருந்தது. இன்னொரு பக்கம் அஜ்யா என்ற அரவாணிப் பெண் சிறையில் மிகக் கொடுமையான சித்திரவதைகளை அனுபவித்து விட்டு பின் தூக்கிலிடப்படுகிறான். இதற்குக் காரணம் வைர, வைடூரியங்கள் போன்ற பொக்கிஷங்களை ஔரங்கசீப் வேறு எங்கேயோ புதைத்துவிட்டு அதை பதுக்கி வைத்திருக்கும் இடத்தை ஆட்டுத் தோலில் வரைந்து அவளிடம் ஒப்படைத்துவிட்டு இறந்தது தான் என்று ஔரங்கசீப்பின் மகனான முகம்மது ஆசம் நம்பியது தான்.

அரச பதவி என்பது ஒரு மரண சிம்மாசனம். அதில் ஏறி அமர்ந்தவன் மெல்ல தனது மனிதத் தன்மைகளை இழந்து போவான். அவனை சிம்மாசனம் ஆட்சி செய்யத் தொடங்கிவிடும். அரியணையில் அமர்ந்து கொண்டு எளியவர்களை அதிகாரம் செய்யும் போதையில் மயக்கம் கொண்ட பிஷாடனின் கதை வரும்போது அதிகார வெறியும், முட்டாள்தனமும் கொண்ட அவனது ஆட்சியை அயல்வணிகன் ரெமியஸ் எவ்வாறு படிப்படியாக கைப்பற்றி ஆள முயல்கிறான் என்பதோடு, இறுதியில் பிஷாடன்மக்களை அதிகமாக துன்புறுத்தி டெல்லிக்கு தன் நாட்டு மக்களையும் வலுக்கட்டாயமாக செலுத்திக் கொண்டு போகும் வழியில் பகைவர்களால் கை, கால்கள் வெட்டப்பட்டு கண்கள் குருடாக்கம் பட்டு பசியும் தாகமும் வருத்த யாரும் கண்டு கொள்ள முடியாத நிலையிலேயே இறக்கிறான். நாவலின் பல இடங்களில் கிளைக் கதைகளும் முளைக்கின்றன. அனைத்து கதைகளும் நீதி குறித்தே பேசுவதாக உள்ளது.

**தாய்மையின் சிறப்பு**

அவ்வையார், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் ! என்றும், "தாயிற் சிறந்த கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை! என்றும் தம் கொன்றை வேந்தன் என்ற நூலில் குரல் கொடுக்கிறார். அதுபோல எஸ்.ரா.அவர்களும், பெண் என்பவள் வீட்டு வேலைகள், வெளி வேலைகள் அனைத்தையும் இழுத்துப் போட்டு செய்யக்கூடியவள். எந்த இன்பத்தையும் அனுபவிக்காமல் வாழ்பவள் பெண். அவள் சாப்பிடுவது கூட தனக்கென ஒன்றும் செய்யாமல் கோழி தானியத்தைக் கொத்துவது போலத் தானிருக்கும் என்று தாயின் தியாகத்தைக் கூறுகிறார்.

"பாவம் அம்மா. ஒரு போதும் தன்னை அலங்கரித்துக் கொள்ளாதவள். வேலை வேலை என சலித்து மயங்கி விழும் வரை வீட்டு வேலைகள் வெளிவேலைகள் என இழுத்துப் போட்டுக் கொள்வாள். அம்மா குளிப்பது கூட கடமை என்பது போலதானிருக்கும். அவள் கூந்தலைப் பின்னி முடித்து பூச்சூடிக்

கண்டதேயில்லை. எதில் தான் அம்மாவிற்கு விருப்பமிருந்தது. அவள் சாப்பிடுவதே கூட கோழி தானியத்தைக் கொத்துவதைப் போலதானிருக்கும். எந்த இன்பத்தையும் அனுபவிக்காமல் வாழும் வாழ்க்கைக்கு என்ன தான் பயன். இத்தனை வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாலும் அப்பாவின் ஏச்சும் பேச்சும் கோபமும் அவளை விட்டு வைக்கவில்லை. சில நாட்கள் வேதனை தாங்க முடியாமல் அம்மா தனியே உட்கார்ந்து விக்கி விக்கி அழுவாள்”[4] என ஆசிரியர் கூறுவதன் மூலம் ஏழைத்தாயின் நிலையை இந்நாவலின் மூலம் அறிய முடிகிறது.

**மக்கட்பேறு**

“மனைக்கு விளக்கம் மடவார் மடவார்

தமக்கு தகை சால் புதல்வர்” எனும் நான்மணிக்கடிகை பாடல் மனைக்கு பெண்களே சிறப்பு என்றும், பெண்களுக்கு அவர்கள் பெற்றிருக்கும் புதல்வர்களே சிறப்பு என்றும் பகர்கின்றது.

குழந்தைகள் இல்லாத பெண்களை இச்சமுதாயம் “மலடி” என்று பட்டமளித்து புறம் தள்ளுகிறது.

ஒரு பெண்ணிற்கு சிறப்பு தாய்மை அடைவதாகும். அந்த வகையில் கீழ் ஜாதி பெண்ணான நளா என்பவள் கர்ப்பமுற்றிருக்கிறாள். அவளுக்கு பிரசவ வலி ஏற்படுகிறது. கீழ் ஜாதி பெண்ணிற்கு கீழ் ஜாதி மருத்துவச்சியே பிரசவம் பார்க்கும் நிலை இருந்தது. நளாவிற்கு பிரசவம் பார்க்கும் மருத்துவச்சியான பிரஜா என்ற கிழவி நிசிதாப்பூர் சென்றுவிட்டாள். அவளுக்கு மருத்துவம் பார்க்க எந்த மருத்துவச்சியும் வரவில்லை. இறுதியாக பிலாஸிட்டில் வசித்து வந்த ஒரு மருத்துவச்சியை அழைத்து வந்தார்கள். அவளுக்கு நளா என்பவள் கீழ்ஜாதி பெண் எனத் தெரியவே அவளை கையால் தொட மறுக்கிறாள். கொண்டை ஊசியினை வைத்து அவளின் பனிக்குடத்தைக் குத்தி சேதப்படுத்தி விட்டாள். இதனால் குழந்தையும், இறந்து தாயும் இரத்த வெள்ளத்தில் மூழ்கும் அபாயநிலை ஏற்படுகிறது. மேல்சாதி, கீழ்சாதி என்ற பாகுபாடு இருந்து வந்த நிலையை எஸ்.ரா அவர்கள் தன் இடக்கை நாவலில் சுட்டிக் காட்டுகிறார்.

“அந்த மருத்துவச்சி” உங்களைப் போன்ற கீழ்சாதி நாய்களுக்கு எதற்கு பிள்ளைகள்? ரத்தப்பெருக்கு நிற்கவில்லை. இனிப் பிழைக்க மாட்டாள்” என ஏசியபடியே நளாவை ரத்த வெள்ளத்தில் மிதக்க விட்டு வெளியேறிப் போனாள்”[5]

தாய்மைப் பேறு என்பது மிகவும் அற்புதமானது. கிடைப்பது என்பது மிகவும் அரிதானது. இவ்வாறு இருக்கையில் அரசரிடம் பணிபுரியும் பணிப்பெண்கள் தாய்மை அடைவதை அதிகார வர்க்கத்தினர் ஏற்க மறக்கின்றனர் என்னும் அவல நிலை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவர்கள் கருவுற்றால் அக்கருவினை அழிக்கும் மனநிலைக்கு ஆளாகின்றனர். அதுமட்டுமின்றி அந்தப் பெண் தனி அறைக்கு மூன்று மாத காலம் ஒதுக்கப்பட்டு விடுவாள். கர்ப்பம் கலைக்கும் போது அவர்கள் இறந்து விட்டால் சாதாரணமாக அனைவருக்கும் செய்யும் இறுதிச்சடங்குகள் செய்யாமல் புதைக்க எரிக்க இல்லாமல் அவர்களை ஆற்றில் போட்டுவிடும் வழக்கம் இருந்துள்ளதை சுட்டிக்காட்டுகிறார்.

“அரசன் உறக்கம் விழிக்கும் வரை அவர்கள் கட்டிலில் தான் கிடக்க வேண்டும். ஆசை நாயகிகளில் எவர் கர்ப்பம் கொண்டாலும் அது உடனடியாகக் கலைக்கப்பட்டுவிடும். அத்துடன் அந்தப் பெண் தனி அறைக்கு ஒதுக்கப்பட்டு மூன்று மாத காலம் விலக்கி வைக்கப்படுவாள். சில நேரங்களில்

கர்ப்பம் கலைக்கும்போது இளம் பெண்கள் இறந்து போய்விடுவதுண்டு. அது போன்ற நேரங்களில் அவர்களைத் துணியில் கட்டிக் கொண்டு போய் ஆற்றில் போட்டு விட்டு வந்து விடுவார்கள். புதைப்பதோ, இறுதிச்சடங்குகள் செய்வதோ கிடையாது."[6] இதிலிருந்து பெண்கள் போகப் பொருளாக மன்னர் காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என ஆசிரியர் கூறுவது மூலம் அறிய முடிகிறது.

**அரவாணிகளின் நிலை**

மூன்றாம் பாலினத்தவரான அரவாணிகள் இன்று உலக அளவில் பேசப்படும் நிலை உள்ளன. அவர்களுக்கென்று அரசு வாக்குரிமை, நிதி உரிமை, நீதி உரிமை, அரசு வேலை போன்ற பல உரிமைகளை இன்று வழங்கி வருகின்றன. ஆசிரியர் அவர் நாவலில் அரவாணிகளின் நிலைப்பற்றி விளக்கிக் கூறுகிறார். பொதுவாக மன்னர்களுக்குக் கீழ் பணிபுரியும் பெண்களாக நிர்வகிக்கும் பொறுப்பில் அரவாணிகள் இருந்துள்ளனர்.

அந்தப்புரத்தில் உள்ள பணிப்பெண்களை நிர்வகிக்கும் அரவாணிகளின் நாக்கை துண்டிக்கும் பழக்கம் இருந்துள்ளது. அவர்களுக்கு பேச்சுரிமை மறுக்கப்படும் நிலையும் இருந்துள்ளது. இதனை ஆசிரியர்,

"ஆயிரம் பெண்களுக்கும் மேலிருந்த அந்த அந்தப்புரத்தை மஹல்தார் எனப்படும் அரவாணியே நிர்வாகம் செய்வாள். அவளுக்குக் கீழே முப்பத்திரண்டு துணை அதிகாரிகள் இருந்தார்கள். இந்தப் பணிக்கு பெரும்பாலும் அரவாணிகளே நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் பேரரசனின் படுக்கை அறைக்குள் சேவகம் செய்யும் அரவாணிகளின் நாக்கு துண்டிக்கப்பட்டிருக்கும்"[7]

இந்த அரவாணிகள் அரசனுடன் பணிபுரியும் பெண்களாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். அவ்வகையில் அஜ்யா என்ற பெண்ணிற்கு ஔரங்கசீப் என்னும் அரசன் அனைத்து உரிமைகளையும் கொடுத்துள்ளார். இச்செய்தியானது அவர் இறக்கும் போது தன்னுடைய உயிலில் எழுதியுள்ளார்.

"அஜ்யா, கடிதம் என்ன, என் உயிலில் உன்னைப் பற்றி எழுதிவிடுகிறேன். நீயில்லாமல் என் இறுதிக் காரியம் நடக்காது. என் கைப்பட குரான் எழுதிக்கிடைத்த வருவாயை உன்னிடம் ஒப்படைக்கிறேன். அதில் தான் எனது சவத்துணி வாங்கப்பட வேண்டும். என் பெயர் இந்த உலகில் வாழும் காலம் வரை நீயும் இருப்பாய். இப்போதே அந்த ஆணையை எழுதிவிடுகிறேன்"[8] என மன்னர் ஔரங்கசீப் கூறுவதாக நாவலாசிரியர் படைத்துள்ளார்.

**தொழில்**

ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழ்வதற்கு ஏதேனும் ஒரு தொழிலை மேற்கொண்டு வாழ்கின்றனர். ஆண், பெண் இருவரும் சேர்ந்து சேர்ந்து வேலை செய்து பொருளாதாரத்தை ஈட்டுகின்றனர். தொல்காப்பியர்,

"வினையே ஆடவர்க்கு உயிரே" என்று தொழிலை ஆண்களுக்கு உரிய கடமையாகக் குறிப்பிடுகிறார். ஊதியத்தைப் பெறுவதற்கு செய்யப்படும் எந்த வேலையும், உழைப்பு (தொழில்) எனப்படும். உழைப்பை உடல் உழைப்பு, மன உழைப்பு என வகைப்படுத்தலாம்.

பெண்கள் வீட்டுவேலை செய்வது மட்டுமின்றி அரசுப் பணியிலும் ஈடுபட்டுள்ளார்கள் என்பதனை ஆசிரியர் தன் நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். அரண்மனை காவல் காக்கும் பணியில்

ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் பணியில் இருந்துள்ளனர். ஔரங்கசிப் மன்னனின் அரண்மனை அறையில் பதினாறு காவல் வீரர்களில் எட்டுப்பேர் தார்த்தாரிய பெண்கள் காவல் புரிந்தனர்.

சாமர் இனப் பெண்கள் கழிவுகளை சுத்தம் செய்வதும், குதிரை லாயங்களையும், மாட்டுத் தொழுவங்களையும் பராமரித்து வந்தனர். அறுவடைக் காலத்தில் விவசாயப் பணிகளுக்குச் சென்றனர். அவர்களுக்கு தினக்கூலியாக இரண்டு சேர் தானியம் கொடுத்தார்கள். சில இடங்களில் எச்சில் உணவு, மாவுடன் உமி கலந்து சுட்ட ரொட்டி உணவாகக் கிடைத்தது.

யாராவது உடல்சரியில்லாமல் இருந்தால் அவர்களுக்கு வைத்தியம் பார்ப்பது, பேய் ஓட்டுவது, மந்திரம் செய்வது போன்ற தொழில்களைச் செய்து வந்தனர்.

மழைக்காலத்தில் இடிந்த வீடுகளை சரிசெய்வர். இவ்வாறான பல தொழில்களைச் செய்து வாழ்ந்து வந்தனர். மேலும் அப்பெண்கள் ஒடுக்கப்பட்டவர்களாகத் திகழ்ந்து வந்தனர். அவர்கள் தனது இடதுகையைப் பயன்படுத்தக்கூடாது என்றும் தண்டிக்கப்பட்டு இருந்தனர்.

**முடிவுரை**

”சேரிப் பெண்கள் நகிலியில் கதவில்லாத மண்வீடுகளே இருந்தன. சிலர் மரத்தடுப்பைக் கொண்டு வாசலை மூடியிருந்தார்கள். குளிர்காலத்தில் அது போன்ற மண்வீட்டில் குடியிருப்பது நரக வேதனை தரக்கூடியது. ஆனாலும் கதவு வைத்து வீடு கட்டிக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. சேரிப் பெண்கள் தலையில் பூச்சூடிக் கொள்ளவோ, காதணி, மூக்கணி அணிந்து கொள்ளவோ அனுமதியில்லை. தங்கத்தை அவர்கள் தொடக்கூட அனுமதியில்லை.”[9] எனச் சேரிப் பெண்கள் படும் துயரத்தையும் நாவலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இடக்கை என்னும் இந்நாவலில் பெண்ணியத்தின் மையக்கருத்தாக அமைந்த மக்கட்பேறு, தொழில், அரவாணிகளின் நிலை, சேரிப் பெண்கள் படும் துயரம் போன்ற கருத்துக்களை இக்கட்டுரை மூலம் அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1) நா.பிரேமா, பெண்ணியம், ப.13
2) டாக்டர் ச.முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப.11
3) இராஜம் கிருஷ்ணன் காலந்தோறும் பெண், ப.210
4) எஸ்.ராமகிருஷ்ணன், இடக்கை, ப.எ.52
5) எஸ்.ராமகிருஷ்ணன், இடக்கை, ப.எ.118
6) எஸ்.ராமகிருஷ்ணன், இடக்கை, ப.எ.93
7) எஸ்.ராமகிருஷ்ணன், இடக்கை, ப.எ.93
8) எஸ்.ராமகிருஷ்ணன், இடக்கை, ப.எ.101
9) எஸ்.ராமகிருஷ்ணன், இடக்கை, ப.எ.43

**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.



tamilmanam